# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.28/2022** **நாள் : 15.07.2022**

## ஈ.வெ.ரா பெரியார் நெடுஞ்சாலை-வானல்ஸ் ரோடு சந்திப்பு அருகில் பிரதான குழாய்கள் மாற்றியமைக்கும் பணிகள் மேற்கொள்வதால் பகுதி-5, பகுதி-6 மற்றும் பகுதி-8-க்குட்பட்ட பகுதிகளில் 16.07.2022 அன்று காலை 10 மணி முதல் 18.07.2022 காலை 10 மணி வரை குடிநீர் விநியோகம் நிறுத்தம்

## சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்

எதிர்வரும் பருவமழையை முன்னிட்டு நெடுஞ்சாலைத் துறையால் ஈ.வெ.ரா பெரியார் நெடுஞ்சாலையில் வானல்ஸ் ரோடு சந்திப்பு அருகில் சாலையின் குறுக்கே மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பணி நடைபெறும் இடத்தில் ஏற்கனவே உள்ள குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய்கள் சென்னைக் குடிநீர் வாரியத்தால் இடம் மாற்றம் செய்யப்படவுள்ளது. இப்பணிகள் 16.07.2022 காலை 10 மணி முதல் 18.07.2022 காலை 10 மணி வரை நடைபெறவுள்ளதால் பகுதி-5-க்குட்பட்ட வேப்பேரி, பெரியமேடு, பார்க்டவுன், சிந்தாதிரிப்பேட்டை, எழும்பூர், கொண்டித்தோப்பு, சௌகார்ப்பேட்டை, ஏழுகிணறு, ஜார்ஜ்டவுன், பிராட்வே, புதுப்பேட்டை, திருவல்லிக்கேணி, பகுதி-6-க்குட்பட்ட பெரம்பூர், புளியந்தோப்பு,. நம்மாள்வார்பேட்டை, புரசைவாக்கம், செம்பியம், ஓட்டேரி, பகுதி-8-க்குட்பட்ட கெல்லிஸ், அயனாவரம் , கீழ்பாக்கம் தோட்டம், சேத்துபட்டு, டி.பி.சத்திரம், மற்றும் வில்லிவாக்கம் பகுதிகளில் குழாய் மூலமாக வழங்கும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவுள்ளது.

இதனால், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள கீழ்க்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| பகுதிப் பொறியாளர்/பகுதி-5 | கைபேசி எண்.8144930905 | வேப்பேரி, பெரியமேடு, பார்க்டவுன், சிந்தாதிரிப்பேட்டை, எழும்பூர், கொண்டித்தோப்பு, சௌகார்ப்பேட்டை, ஏழுகிணறு, ஜார்ஜ்டவுன், பிராட்வே, திருவல்லிக்கேணி, புதுப்பேட்டை |
| பகுதிப் பொறியாளர்/பகுதி-6 | கைபேசி எண்.8144930906 | பெரம்பூர், புளியந்தோப்பு, நம்மாள்வார்பேட்டை, புரசைவாக்கம், செம்பியம், ஓட்டேரி, |
| பகுதிப் பொறியாளர்/பகுதி-8 | கைபேசி எண்.8144930908 | கெல்லிஸ், அயனாவரம், கீழ்பாக்கம் தோட்டம், சேத்துபட்டு, டி.பி.சத்திரம் மற்றும் வில்லிவாக்கம் |

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்

கழிவு நீரகற்று வாரியம்